முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No.130/2023

2024 வது ஆண்டு ஜூலை மாதம் 10-ம் நாள் வா.சா.2 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.செய்யது அலி<br>(கிராம நிர்வாக அலுவலர், பழவூர் ) | வட்டம் | |
| க.பெ /<br>த.பெ | திரு. | கிராமம் | |
| வயது | | மதம் | |

10.07.2024 முதல் விசாரணை

நான் பழவூர் கிராம நிர்வாக அலுவலராக பனியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. அழைப்பாணையில் கண்டபடி ஆவணங்களுடன் வந்துள்ளேன். திருநெல்வேலி தாலுகா பழவூர் கிராமம் நத்தம் சர்வே எண்.278/7 பி-க்கு தொடர்பான நத்தம் நில வரி திட்ட அடங்கல் பதிவேடு கொண்டு வந்துள்ளேன். அந்த ஆவணம் படி மேற்சொன்ன சர்வே எண் தெரு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. யு.டி.ஆர் ஏற்பட்ட காலம் முதல் தெரு என்றே பதிவாகியுள்ளது. கிராம கணக்கில் தெரு என்றே உள்ளது.புல வரைபடத்தில் தெரு என்று தான் காண்பிக்கப்பட்டுள்ளது. குருநாதன் என்பவர் மேற்சொன்ன தெருவை மற்றவர்கள் புழங்கவிடாமல் தடுத்து வருகிறார் என்று விசாரணையில் தெரிய வந்தது. மேற்சொன்ன தெரு எந்த தனி நபருக்கும் தனிப்பட்ட சொத்து கிடையாது . தெருவாகவே வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நத்தம் நிவ வரி தூய அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1 ஆகும்.